RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சங்க இலக்கியங்களில் உணவியல் கோட்பாடுகள்

**இரா.ஜோதிமணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோயம்புத்தூர்-641004, தமிழ்நாடு, இந்தியா.

# Dietetic Principles in Associational Literature

**R. Jothimani** [a, *]

[a] Department of Tamil. PSGR Krishnammal College for women, Peelamedu, Coimbatore-641004, Tamil Nadu, India

* Corresponding Author: rjothimanitamil@gmail.com

Received: 16-04-2024
Revised: 17-06-2024
Accepted: 28-06-2024
Published: 30-07-2024

**ABSTRACT**

In today's rapidly growing world, the basic needs of humans such as food, clothing and shelter are undergoing major changes. Due to this change, many unknown diseases occur in humans and they suffer from poor health. Food is the basic need of all living things. The feeling of hunger is called pini. We eat many types of food to satisfy such hunger. Thus the food eaten varies from season to season. The Sangha period was one of the periods that underwent such changes. In today's time, we eat different types of fast food and get diseases. In this case, the purpose of this article is to try to know what kind of food our forefathers Tamils ate. Our Sangha literatures are the sources to know that. and methods in the life of Sangam people. Sangha literature, which is a mirror to show their morals, is the study of this article. This article deals with the news about nutrition as recorded in the Sangam literatures, Ettupaat and Patupat.

**Keywords:** Sangam literatures, five types of land, types of food of Sangam people, food based on land, the nobility fed by kings

## முன்னுரை

மனித இனம் தோன்றிய நாள் முதல் இன்றைய நாள் வரை பசி என்ற உணர்வும் நிலையானதாக உள்ளது. ஆனால் உணவு என்பது காலத்திற்கு காலம், இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. இத்தகைய மாறுபாட்டையும் வேறுபாட்டையும் அறிந்து கொள்ளும் ஆவணங்களாக இருப்பவை இலக்கியங்கள் ஆகும். அத்தகைய தமிழ் இலக்கியங்களில் தலையாய இலக்கியங்களாக விளங்குபவை சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க கால மக்களின் வாழ்வியல் முறைகளையும். அவர்களது பண்பாடுகளையும் உணவுமுறைகளையும் காட்டும் கண்ணாடியாக விளங்கும் சங்க இலக்கியங்கள்கட்டுரையின் ஆய்வுக் களமாக அமைந்துள்ளது. சங்ககால மக்கள் ஒப்புயர்வற்ற, இயற்கையோடு இணைந்த இன்ப வாழ்க்கை நடத்தினர். காதலும் போரும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதைசங்கப் பாடல்களின் வழி அறிய முடிகின்றது. சங்ககாலத்தில் மக்கள் உண்ட உணவு, உடுத்திய உடை, வாழ்ந்த இல்லம் என எல்லாவற்றையும் சங்க இலக்கியத்தின் வழி அறிய முடிகின்றது. சங்க இலக்கியங்களை அகம் புறமெனப் பிரித்துள்ளனர். அவற்றுள் அக இலக்கியங்களில் தலைவன், தலைவி, நற்றாய், தோழி, செவிலி, பாங்கன், பாங்கி, பாணன், பாடினி, விரலி, பரத்தை ,கண்டோர், தந்தை, தமையன்என்ற எல்லாக் கூற்றுகளிலும் உணவின் வகைகள் கூறப்பட்டுள்ளன. உணவின் வகைகள், சமைக்கும் முறை, உண்ணும் முறை, உணவளிக்கும் விதம் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன. புற இலக்கியங்களில் மன்னர்களின் நாட்டுப் பெருமை,நாட்டின் இயற்கை வளம்,

மன்னர்களின் வீரம், போர், வெற்றிச்சிறப்பு ,விருந்தோம்பும் பண்பு, வீரர்களுக்கும் இரவலர்களுக்கும் விருந்து அளிக்கும் தன்மைஆகிய இடங்களில் உணவுகள் பற்றிய செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## ஆய்வுக்களம்

பழந்தமிழர்களின் உணவு முறைகளையும் அவர்களின் பழக்க வழக்கங்களையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுவதைப் போலவே, தொல்காப்பியமும் அக்கால தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும் அகம் புறம் பற்றிய சிந்தனைகளையும் பொருளதிகாரத்தில் பதிவு செய்துள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தொல்காப்பியமும் கட்டுரையின் ஆய்வுப் பொருண்மையாக விளங்குகின்றது.

## தொல்காப்பியர்

உணவின் தேவையை தொல்காப்பியர்,

“தெய்வம் உணாவே மா மரம் புட்பறை

செய்தியாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகைப் பிறவும் கருவெனமொழிப” (**தொல் :அகத்தி** -20)

என்ற நூற்பாவில் எடுத்துரைத்துள்ளார்.

நிலமும் பொழுதும் முதல் எனக் கூறிய தொல்காப்பியர், கருப்பொருட்களைப் பதினான்காகக் குறிப்பிட்டுள்ளார். முதன்மையாக தெய்வத்தை கூறி, இரண்டாவதாக உணவை வைத்துள்ளார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என்ற நிலத்தில் வாழும் மக்கள்தங்களது நிலத்தில் விளையும் உணவு வகைகளைஉண்டு வாழ்ந்தனர் என்பதை குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட நால்வகை நிலங்களில் முல்லையும் குறிஞ்சியும் தன்னியல்பில் திரிந்து பாலை நிலமாக மாறுகின்றது என்பார் இளங்கோவடிகள் (சிலம்பு:காடுகாண் காதை:64-66, 2016)

## அன்பின் ஐந்திணைகள்

1. **குறிஞ்சி நிலம்**:குறிஞ்சி நில மக்கள்ஐவன நெல், தேன், திணை, மூங்கில் அரிசி, அருவி நீர், சுனை நீர் ஆகியவற்றை உண்டனர்.
2. **முல்லை நிலம்:** முல்லை நிலத்தில் வசித்த மக்கள் வரகு, சாமை, கான்யாற்று நீர், காட்டில் கிடைக்கும் கிழங்கு வகைகள், பழவகைகள் முதலியவற்றை உண்டனர்.
3. **மருத நிலம்:** மருத நில மக்கள்செந்நெல், வெண்ணெல், பொய்கை நீர், ஆற்று நீர், மனைக்கிணற்று நீர் போன்றவற்றை உண்டும்பருகியும் வாழ்ந்தனர்.
4. **நெய்தல் நிலம்:** நெய்தல் நில மக்களுக்குரிய உணவாக மீன், மீனுக்கு விலைமாறிய பண்டமும், உவற்குரிநீர், மனைக் கிணற்றுப் பண்டம் ஆகியவற்றை உண்டனர்.
5. **பாலை நிலம்:** பாலை நில மக்களுக்குரிய உணவாக ஆறலைத்த பொருள், சூறைக் கொண்ட பொருள், சுனை நீர் முதலியவற்றை உண்டு வாழ்ந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்கள் என்ற கட்டமைப்பில் உள்ள எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் காணப்படும் உணவியல் செய்திகளும் வாழ்வியலும்இக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ‘இலக்கியம் என்பது இலக்கை நோக்கி இயம்புவது என்பர். ‘இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். இலக்கியம் காட்டும் பொருள் காலம் காலமாக மாறுபடுகிறது. இனியும் அப்படியே

மாறும்'என்று (க.ப அறவாணன்ப.எ.23, 1995) குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்கள் உணவின் அவசியத்தையும் பசியின் கொடுமையையும்ஐந்து நிலங்களிலும் வாழ்ந்த மக்கள், ஐந்திணைகளிலும் கிடைத்த காய்கள்,

கனிகள், கிழங்குகள் இலைவகைகள், தழைவகைகள் போன்ற இயற்கை உணவுகளையும் ஆமா, உடும்பு, புலி, மான், மாடு, நண்டு, நத்தை, நுணல், மீன், சுறா, வரால், ஆமை, ஈயல், போன்ற இறைச்சி உணவுகளையும் உண்டு மகிழ்ந்தனர் என்பதை அறியமுடிகின்றது. இவற்றிற்கான சான்றுகள் இக்கட்டுரையில் பதிவுசெய்யப்படுகின்றன.

## நற்றிணை

நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் பரதவர்கள். படகுடன் சென்று கடலில் மீன் பிடித்த மீன்களை விடியற்காலையில் கொண்டு வந்து, கழிக்கரைச் சோலையில் குவித்துப் புன்னை மர நிழலில் இருந்து, தம் சுற்றத்தோடு மது அருந்தி மகிழும் நிலையை நற்றிணைப்பாடல்,

"{திண் திமில் பரதவர்ஒண் சுடர்க்கொளீ,

நடு நாள் வேட்டம் போகி, வைகறைக்

கடல் மீன் தந்து, கானற் குவை,

ஓங்கு இரும் புன்னை வரி நிழல் இருந்து,

தேன் கமல் தேறல் கிளையோடு மாந்தி" (நற்388 :4-8)

எனப் பதிவு செய்துள்ளது.

முல்லை நிலத்து மக்கள் உண்ட உணவினை. பட்டினப்பாலை பதிவு செய்துள்ளது. காக்கையின் பேடை, தன் பார்ப்பைத் தழுவிக் கொண்டு, தன் இனத்தையும் அழைத்துக் கொண்டுக் கரிய கண்களை உடைய கருனைக் கிழங்கின் பொரிக்கறியோடு கூடிய செந்நெல் அரிசியால் ஆக்கிய, வெள்ளிய சோற்றுத் திறளைத் தெய்வத்திற்குப் பலியாக இடும் மனையின் கண்ணே கூடினவாய், திறந்து இருக்கும் என கூறும் இடத்தில், முல்லை நில மக்களின் உணவு "கடுங்கண் கருனைச்செந்நெல் வெண்சோறு" (நற்:367-3) என்ற நற்றிணைப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நற்றிணை முல்லைத்திணைப் பாடலில், உடும்பு வேட்டை. நுணல் வேட்டை. தவளை, ஈயல், முயல் வேட்டை என வேட்டையாடி உண்டனர்,

உடும்பு கொளீஇ, வரி நுணல் அகழ்ந்து

நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி,

எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல (நற்: 59:1-3, 2017)

ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளது.

## குறுந்தொகை

வளைந்த மீன் படகையுடையபரதவர், கொம்புகளை உடைய சுறா மீனை எரியுளியால் பிடித்தனர் என்ற செய்தியைக்

"கொள்வினைப் பொலிந்த கூர்வாய் எறிஉளி

முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்

தாங்குஅரு நீர்சுரத்து எறிந்துவாங்குவிசைக்

கொடும் திமிற் பரதவர்கோட்டு மீன் எறிய" (குறுந் 304:1-4, 2017)

என்றும் பல் மீன் வேட்டத்து என்னையர் திமிலே (குறுந்:123 -5, 2017)

என்றக் குறுந்தொகைப்பாடல்கள் மீன் வேட்டையாடி உண்டதைக் குறிப்பிடுகின்றது.

## அகநானூறு

பரதவர்கள் மீன் வேட்டையாடி உண்ட செய்தியை. பரதவர் எறியுளி பொருத ஏமுறு பெரு மீன் (அகம் 210: 1-2,2017) என்று அகநானூறு பதிவு செய்துள்ளது.

மருதநில மக்கள் உணவுஉண்ணும் தன்மையை, தலைவன் பரத்தையர் சேரிக்குச் சென்று அவளோடு தங்கி வைகறைப் பொழுதில் இல்லம் திரும்பினான். அப்போது அவனுடன் ஊடல் கொண்ட தலைவி கூறியது. கள் மிகுந்த பாக்கத்து நீண்ட கொடிகள் அசைந்தாடிக் கொண்டிருந்தன. பாணர்கள் வைகறை வேட்டையில் துறையிடத்து அகப்பட்ட பெரிய வயிற்றினை உடைய வரால் மீனின், துடியின் கண் போன்ற கொழுவிய துண்டத்தினை விற்று அப்பொருள் கொண்டு கள்ளுண்டு களித்து ஆடினர். மீண்டும் கடல் வேட்டைக்குச் செல்ல மறந்து போன கணவன் மார்களுக்கு அவரவர் மனைவியராகிய பாண் மகளிர் விடியற்காலத்தேஆம்பலது அகன்ற இலையில் சுடுகின்ற சோற்றுத்திரளோடு, பிரம்பின் புளிப்பும் இனிப்பும் கலந்த திரட்சியான பழத்தினைக் கொண்டு ஆக்கிய புளியங்கறியை இட்டு உண்பிப்பர். அத்தகைய மருத நிலத்தின் தலைவன் எனப் பரணர் குறிப்பிட்டுள்ளார்.

"ஆம்பல் அகல் இலை அமலை வெஞ்சோறு

தீம்புளி பிறம்பின் திரல்கனி பெய்து" (அகம்: 196:5-6, 2017)

## பட்டினப்பாலை

முழு நிலவு நாளில் பரதவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்க செல்லாமல். தழை யாடையை அணிந்தும். சினையுடைய சுறா மீனின் கொம்புகளை நட்டும், சொரசொரப்பான பனை மரத்தின் கள்ளைக் குடித்தும், தாங்கள் விரும்பும் உணவைத் தின்றும் பெண்களோடு இருந்தனர் எனப் பரதவரின் நிலையை,

"சினைச்சுறவின் கோடு நட்டு,

மனைச் சேத்திய வல் அணைங்கினான்

மடழ்தாழை மலர் மலைந்தும்

புன்தழைஇரும் பரதவர்" (பட்டினப்: 86-90, 2017)

எனப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. மீனை வெட்டி. இறைச்சியை அறுத்து தசையை பொரிக்கும் ஒலி, முற்றத்தில் மணலை குவித்து வைத்து மலர்களைச் சிதறி, பலர் போகும் இல்லம் என்பதை,

"மீன் தடிந்து, விடக்கு அறுத்து,

ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்,

மணர்குவைஇ, மலர் சிதறி

பலர்புகும்மனைப் பலிப்புதவின்

நறவுநொடைக் கொடியோடு" (பட்டினப்:176- 180, 2017)

எனப் பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ளன.

## புறநானூறு

புறநானூற்றில் அரசவாகை என்ற துறையில் நலங்கிள்ளியின் வீர இயல்பை கூறும்போது நாட்டில் வாழும் குடிமக்களின் பெருமையைக் குறிப்பிடுமிடத்து, வேட்டை நாயை உடைய வேட்டுவன், காட்டில் வாழும் வாழ்க்கையன், அவன் மான் தசையை கொண்ட கடக பெட்டியையும் ஆய்மகள் தயிர் கொண்டு தந்த பானையையும் உடையவன். அவனுக்கு ஏறினால் உழுது வாழும் உழவர்களின் பெரிய வீட்டில் உள்ள மகளிர் குளத்திற்கு அருகில் விளைந்த களத்தில் இருந்துப் பெற்ற வெண்நெல்லைமுகந்து தருவர். அதனைப் பெற்றவனாய் மகிழ்ந்து தன் இருப்பிடத்திற்கு மீள்வான். இவ்வாறு வள்ளல் தன்மை மிக்க குடிகளை உடையவன்,

"கான் உறை வேட்டை கத நாய், வேட்டுவன்

மாந்தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்

தயிர் கொடு வந்த தசும்பும், நிறைய

ஏரின் வாழ்நர்பேரில் அரிவையர்

குளக் கீழ் விளைந்த களக் கொள் வெண்ணெல்

முகந்தனர் கொடுப்ப, உகந்தனர் பெயரும்

தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்" (புறம்:33: 1-7, 2017)

என்றப் புறப்பாடல் குறிப்பிடுகின்றது. எந்த நன்றியை மறந்தவருக்கும் மன்னிப்பு உண்டு ஆனால் செய்ந்நன்றி மறந்தவர்களுக்கு மன்னிப்பு இல்லை என்று புறநானூறு குறிப்பிட்டுள்ளது.தனக்கு உணவளித்த வள்ளலைப் போற்றி பாடல் பாடுவதாக அமைந்த பாடலில். புறாவின் கருமுட்டை போன்ற உண்மையான நிலத்தில் விளைந்தவரகரிசியை. பாலில் இட்டு சமைத்த உணவை. தேனுடன் கலந்து உண்டனர். சிறிய முயலின்கொளுத்த சூட்டு இறைச்சியையும் என் சுற்றத்தார் தின்றனர். இலந்தை மரம் உயர்ந்த அகன்ற இடத்தைஉடைய மன்றத்தில், இனிய மொழிகளைக் கூறி பெருந்திரளாகிய கொழுத்த சோற்றினைஎம்போன்ற பாணர்கள் உண்டனர். இவ்வாறு உணவளித்த அரசே நீ வாழ்க. என்ற பாடலின் வழி உணவு பற்றிய வகைகளை அறிந்து கொள்ள முடிகிறது. நெல் என்ற உணவுப் பொருளின் பெயர் பல இடங்களிலும் இடம்பெற்றுள்ளது. "காய்நெல்லறுத்துக் கவளம் கொளினே" (புறம்184-1, 2017)"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே" (புறம்:186-1, 2017)

## முடிவுரை

'சங்க இலக்கியங்களில் உணவியல் கோட்பாடுகள்' என்னும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்தியதன் விளைவாகப் பல ஆய்வு உண்மைகள் கண்டறியப்பட்டுள்ளன.சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தினர்.மாசுபடாத சூழலியலைக் கொண்டிருந்தனர்.இயற்கைச் சூழலில் வாழ்ந்த காரணத்தினால் தன்னைச் சுற்றியுள்ள தாவரங்கள், நிலம்வாழ் உயிரினங்கள்,நீர்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றை உண்டு வாழ்ந்தனர் என அறிய முடிகிறது. ஐவகை நிலங்களுக்குமான உணவுகளை உண்டதோடு, பண்டமாற்று முறையின் வழியாகக் கிடைத்தப் உணவையும் உண்டு மகிழ்ந்தனர் என்பது புலப்புடுகிறது. மன்னர்களின் விருந்தோம்பல் ஆகியவற்றின் வழி சங்க கால உணவு முறைகளை அறிய இடமுள்ளது. சங்கநூல்கள் ஒவ்வொன்றையும் தனியாக ஆய்வு செய்வதற்குரியகளங்கள் மிகதியாகக் காணப்படுகின்றன.

## References

முனைவர்கு.வே.பாலசுப்ரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம், நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட், 41. பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை. 600098 ஆறாம் பதிப்பு அக்டோபர் 2017.

இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் பொருள் அதிகாரம், சாரதா பதிப்பகம். சென்னை.600014. முதற்பதிப்பு மே 2005, 13 ஆம் பதிப்பு--2014.

முனைவர் இரா. செயபால், (உ.ஆ) சங்க இலக்கியம். அகநானூறு மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர்,சென்னை- 600098.ஆறாம் பதிப்பு அக்டோபர் 2017.

முனைவர் இரா. செயபால், (உ.ஆ) சங்க இலக்கியம். புறநானூறு மூலமும் உரையும்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி )லிட். ஆறாம் பதிப்பு -2017.

முனைவர் இரா. செயபால், (உ.ஆ) சங்க இலக்கியம். குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட். ஆறாம் பதிப்பு -2017.

க.ப.அறவாணன், படைப்பாளி+சமுதாயம்=இலக்கியம், தமிழ்க்கோட்டம், 11, இரண்டாம் தெரு, மோகன் நகர், புதுச்சேரி-605005. முதல்பதிப்பு-09.08.1995.

முனைவர் வி.நாகராசன், (ஊ.ஆ) பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட். ஆறாம் பதிப்பு -2017.

ஞா.மாணிக்கனார், (ஊ.ஆ), சிலப்பதிகாரம், தெளிவுரை, உமா பதிப்பகம், 18, (பழைய எண்.171), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-600001, ஒன்பதாம் பதிப்பு-ஜூலை, 2016.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License